**செய்தி வெளியீடு எண்:150** **நாள்:23.02.2021**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (23.2.2021) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்கு மாதம் ரூ.1,000/– கருணை ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 9 ஓய்வு பெற்ற தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்கு ஓய்வூதிய அட்டைகளை (PACCS EPS CARD) வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

விவசாயிகளுக்குத் தேவையான குறுகிய காலப் பயிர்கடன், முதலீட்டுக் கடன், வேளாண்மை தொழிலுக்குத் தேவையான உரம், விதை போன்ற இடுபொருட்களை வழங்கி வருவதோடு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை பொது மக்களுக்கு விநியோகம் செய்து, உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. விவசாயிகளின் முதுகெலும்பாக செயல்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பித்த பெருமை தமிழ்நாட்டையே சாரும். தற்போது 4,449 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் மொத்தம் 25,546 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தற்போது பணியாற்றிவரும் பணியாளர்களில், பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் (Employees Pension Scheme) உறுப்பினரல்லாத 19,876 பணியாளர்களுக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் கருணை ஓய்வூதிய நிதியம் (PACCS Employees Ex-Gratia Pension Corpus) அமைக்கப்பட்டு அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு இந்த நிதியிலிருந்து மாதம் ரூ.1,000/– கருணை ஓய்வூதியமாக வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே ஓய்வு பெற்ற 8,752 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியமான ரூ.1,000/– அந்தந்த சங்கங்களால் வழங்கப்படும். இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு கூடுதலாக 34 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.தயானந்த் கட்டாரியா, இஆ.ப., தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன், துணைத் தலைவர் திரு. எஸ். ஆசைமணி, மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.ஜி.சக்தி சரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**